1973 மார்ச் 26]

மாண்புமிகு திரு செ. மாதவன்: ஜப்பானியத் தொழில் நுட்ப அறிவு தேவை, "டெக்னிகல் நோஹௌ தேவை என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அது பற்றிப் பேச்சு வார்த்தை இப்போது நடைபெற்று வருகிறது.

Advertisement for Arasu Cement.

* 514—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the expenditure incurred for the advertisement of Tamil Nadu Arasu Cement given in the All India Radio for the calendar years 1971 and 1972 ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: ரூ. 29,536.25.

திரு என். டென்னிஸ்: தலைவரவர்களே, இதன் மூலம் இதன் செலவு அதிகரித்து இருக்கிறதா? இல்லை உற்பத்தி பெருக வழி வகுத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: நம்முடைய சரக்குக்காக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. எதாவது வியாபாரத்தில் விளம்பரம் செய்தால் பயன் கிடைக்கும்.

திரு கா. வேழவேந்தன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது சிமெண்ட்டுக்கு விளம்பரம் செய்யாவிட்டாலும் வியாபாரம் இருக்கிறது. இப்படி தமிழ்நாடு சிமெண்ட் பற்றி வானொலியில் சொல்லப்படும் விளம் பரம் சுவையாக இருக்கிறது. 3 மாதத்திற்கு ஒரு முறை மாற்றி வேறு வேறு விதமான வகையில் விளம்பரம் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: சில நாட்கள் இந்த விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. சில மாதங்கள் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தத் தொகை செலவாகியிருக்கிறது. முன்னாலே நாம் உற்பத்தி தொடங்கிய போது அந்தக் கஷ்டம் இருந்தது. இப்போது மாண்புமிகு அங்கத்தினர் சொன்னது போல் அரசு சிமெண்ட்டுக்கு ஏராளமான கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திரு நா. வீராசாமி: மாண்புமிகு அமைச்சர் சொன்னது போல், இப்போது நிறைய கிராக்கி ஏற்பட்டு இருக்கிறது. எல்லாப் பக்கங்களிலும் இந்த சிமெண்ட் பற்றி மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை வாங்க வேண்டுமென்ற ஆவல் எல்லாப் பக்கங்களிலும்—கிராமப் புறங்களிலும் இருக்கிறது. ஆகவே, உற்பத்தியைப் பெருக்கி எல்லா மக்களுக்கும் சிமெண்ட் கிடைக்கும் வகையில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிமெண்ட் உற்பத்தியில் எந்த விதமான தடையும் கிடையாது. வெளி

மாநிலங்களுக்கும் அனுப்புகிறோம். ஏராளமாக உற்பத்தியாகிறது. இப்போது இடைக்காலத்தில் 3 மாதமாக உள்ள மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகத்தான் உற்பத்தி குறைந்து இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த சிமெண்ட் சம்பந்தமாக உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். விநியோகத்தைப் பொறுத்த வரையில் இப்போது சிமெண்ட் விலை சமீப காலத்தில் ரொம்ப அதிகமாக உயர்ந்து இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? இதைக்கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு செ. மாதவன் : நான் ஏற்கெனவே சொன்னபடி, மின் தட்டுப்பாடு காரணமாக உற்பத்தி குறைந்து இருக்கிறது. உற்பத்தி யாகும் ஒரு பகுதியைக் கேரள மாநிலத்திற்கும் கொடுத்து விடுவதால், மீதி குறைவாகத்தான் இருக்கிறது. அதனால்தான் சிக்கல். இதைத் தீர்ப்பதற்கு அண்மையில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சில விதிகளைப் பிறப்பித்து இருக்கிறோம். இந்த விதிகளின்படி இனிமேல் அனுமதி வாங்குபவர்களுக்குத்தான் சிமெண்ட் கொடுக்கப்படும். அந்த அனுமதி கூட புதிதாக வேலை தொடங்குவதற்கு இல்லாமல் ஏற்கெனவே தொடர்ந்து நடந்து வருகிற வேலைக்கு மட்டும் அனுமதி கொடுக்கலாம் என்ற முடிவை அரசு எடுத்து இருக்கிறது. அரசின் தேவைகளை முதலில் கவனித்து, உள்ளாட்சித் துறை மன்றங்கள் ஆகியவற்றின் தேவைகளுக்குப் போக மற்றவர்களின் தேவைக்குக் கொடுக்கலாம் என்றும் ஆலோசனை சொல்லப் பட்டிருக்கிறது.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, அரசு சிமெண்ட்டுக்கு வானொலி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. கிராம மக்களும் அது குறித்து அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் முறையில் பத்திரிகை மூலமாகவும் அதிகமாக விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இப்போது செய்தித் தாள்களிலும் விளம்பரம் போடப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, அரசு சிமெண்டுக்கு தமிழ் நாட்டிலே நல்ல கிராக்கியிருக்கிறது. ஆனால், தண்ணீரில் கலக்கிற நேரத் தில் சீக்கிரமாகக் காய்ந்து விடுகிறது என்று குறைபாடு இருக்கிறது. ஆகவே, அதன் தரத்தை உயர்த்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் குறைபாடு இருந்தால் கிராக்கி இருக்காது என்று நினைக்கிறேன். குவாலிட்டியைப் பொருத்த வரையில் நல்ல முறையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கத் தினர் அவர்களுக்கு ஏதாவது அனுபவம் இருக்குமானால் எழுதி அனுப்பி னால் பரிசீலிக்கச் சொல்லலாம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்